ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தூவிரிய ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தூவிரிய ॥

## திருவாலி - 2

‡தூவிரிய மலர் உழக்கித்⋆ துணையோடும் பிரியாதே⋆
பூவிரிய மது நுகரும்⋆ பொறி வரிய சிறு வண்டே!⋆
தீவிரிய மறைவளர்க்கும்⋆ புகழ் ஆளர் திருவாலி⋆
ஏவரி வெம் சிலையானுக்கு⋆ என் நிலைமை உரையாயே (1)

பிணி அவிழும் நறு நீல⋆ மலர் கிழியப் பெடையோடும்⋆
அணிமலர்மேல் மது நுகரும்⋆ அறு கால சிறு வண்டே!⋆
மணி கெழுநீர் மருங்கலரும்⋆ வயல் ஆலி மணவாளன்
பணி அறியேன்⋆ நீ சென்று⋆ என் பயலை நோய் உரையாயே (2)

நீர் வானம் மண்ணெரி காலாய்⋆ நின்ற நெடுமால்⋆ தன்
தார் ஆய நறுந் துளவம்⋆ பெரும் தகையேற்கருளானே⋆
சீர் ஆரும் வளர் பொழில் சூழ்⋆ திருவாலி வயல் வாழும்⋆
கூர்வாய சிறு குருகே!⋆ குறிப்பறிந்து கூறாயே (3)

தானாக நினையானேல்⋆ தன் நினைந்து நைவேற்கு⋆ ஓர்
மீன் ஆய கொடி நெடு வேள்⋆ வலி செய்ய மெலிவேனோ⋆
தேன்வாய வரி வண்டே!⋆ திருவாலி நகர் ஆளும்⋆
ஆன் ஆயற்கென் உறுநோய்⋆ அறியச் சென்றுரையாயே (4)

வாள் ஆய கண் பனிப்ப⋆ மென் முலைகள் பொன் அரும்ப⋆
நாள் நாளும்⋆ நின் நினைந்து நைவேற்கு⋆ ஓ! மண் அளந்த
தாளாளா! தண் குடந்தை நகர் ஆளா!⋆ வரை எடுத்த
தோளாளா⋆ என் தனக்கோர்⋆ துணையாளன் ஆகாயே (5)

தார் ஆய தண் துளவம்⋆ வண்டுழுத வரை மார்பன்⋆
போர் ஆனைக் கொம்பொசித்த⋆ புள் பாகன் என் அம்மான்⋆
தேர் ஆரும் நெடு வீதித்⋆ திருவாலி நகர் ஆளும்⋆
கார் ஆயன் என்னுடைய⋆ கன வளையும் கவர்வானோ (6)

கொண்டரவத் திரை உலவு⋆ குரை கடல்மேல் குலவரை போல்⋆
பண்டரவின் அணைக் கிடந்து⋆ பார் அளந்த பண்பாளா!⋆
வண்டமரும் வளர் பொழில் சூழ்⋆ வயல் ஆலி மைந்தா!⋆ என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு⋆ என் கன வளையும் கடவேனோ (7)

குயில் ஆலும் வளர் பொழில் சூழ்⋆ தண் குடந்தைக் குடம் ஆடீ⋆
துயிலாத கண் இணையேன்⋆ நின் நினைந்து துயர்வேனோ!⋆
முயல் ஆலும் இள மதிக்கே⋆ வளை இழந்தேற்கு⋆ இது நடுவே
வயல் ஆலி மணவாளா!⋆ கொள்வாயோ மணி நிறமே (8)

நிலை ஆளா! நின் வணங்க⋆ வேண்டாயே ஆகிலும்⋆ என்
முலை ஆள ஒருநாள்⋆ உன் அகலத்தால் ஆளாயே⋆
சிலை ஆளா! மரம் எய்த திறல் ஆளா!⋆ திருமெய்ய
மலையாள⋆ நீ ஆள⋆ வளை ஆள மாட்டோமே (9)

‡மையிலங்கு கருங்குவளை⋆ மருங்கலரும் வயல் ஆலி⋆
நெய்யிலங்கு சுடர் ஆழிப் படையானை⋆ நெடுமாலை⋆
கையிலங்கு வேல் கலியன்⋆ கண்டுரைத்த தமிழ் மாலை⋆
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு⋆ அரு வினைகள் அடையாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥